# “கலைஞர்” - என்றும் மறையாத சொல்!



மண் பேசும் மொழிக்கொரு
மன்னவன் வந்தாய்…

மக்கள் பேசும் உரிமைக்கு
முன்னவன் நின்றாய்..

“தமிழ்” என்ற மூன்றெழுத்தில்
தன் உயிரை வைத்தாய்...

“சமநீதி” என்ற சொல்லுக்கு
சட்டத்தின் வடிவம் தந்தாய்...

பேனா பிடித்த விரல்களில்
புரட்சியின் மை இருந்தது…

நீவீர் பேசிய ஒவ்வொரு சொல்லிலும்
புதிய தமிழகக் கனவு இருந்தது...

ஆளுநர் ஏற்றும் கொடியை
முதல்வன் ஏற்றச் செய்தாய்...

மாநிலத்தின் உரிமை என்பது
மக்களின் உரிமை என்றாய்...

மனிதனை மனிதனே இழுக்கும்
கைரிக்ஷா காலம் முடித்தாய்...
உழைப்பவனின் கரங்களில்
சக்கரத்தைத் தந்தாய்...

வயலில் வியர்வை சிந்தியவன்
வானத்தைப் பார்த்த காலம் போய்...

விவசாயியின் மின்மோட்டாரில்
விடியலை ஓடவிட்டாய்...

பெண்ணுக்கு உரிமை என்றால்
வார்த்தையல்ல வாழ்வுரிமை என்றாய்...

மகளுக்கும் சொத்தில் பங்கு என்ற
மாற்றத்தின் கையெழுத்து தன்னுடையது...

அடுப்படியில் இருந்த கைகள்
அரசியலையும் பொருளாதாரத்தையும் கற்க
செய்தாய்....

விடியல் வேண்டும் என்று
மகளிர் சுயஉதவிக் குழுக்களை விதைத்தாய்…

ஒரு பெண்ணின் சேமிப்பில்
ஒரு குடும்பத்தின் எதிர்காலம் என்றாய்...

ஒரு பெண்ணின் தன்னம்பிக்கையில்
ஒரு சமூகத்தின் மறுமலர்ச்சி என்றாய்...

108 என்ற மூன்று இலக்கத்தில்
எத்தனை உயிர்களின் மூச்சை காப்பாற்றினாய்...

அழைத்தவுடன் வரும் ஆம்புலன்ஸில் எத்தனை
குடும்பங்களின் நம்பிக்கையை காப்பாற்றினாய்...

சென்னையின் வானில்
கட்டிடங்கள் மட்டும் எழவில்லை...

கணினித் திரைகளுக்குள் நவீன தமிழ்நாட்டை
உருவாக்கினாய்...

கோடிக்கணக்கான படித்த
இளைஞர்களுக்குள் பல கனவுகள் எழுந்தன...

டைட்டல் பூங்காவின் கதவுகளை திறந்தபோது...

தமிழக இளைஞனின் கைகளில்
உலகத்தின் வேலைவாய்ப்புகள் வந்து குவிந்தன...

இடஒதுக்கீடு என்ற ஏணியில்
எத்தனை தலைமுறைகளை ஏற்றினாய்...

கல்வி என்ற விளக்கில்
எத்தனை இருட்டுகள் ஓடின...

தமிழ்நாட்டில் தாங்கள் கட்டியது கட்டிடங்கள்
அல்ல...

கட்டிடக்கலையில் நீவீர்! கரிகால் சோழனை
மிஞ்சினாய்...

நீ...எழுதிய இலக்கியத்தையும், நீ படைத்த வரலாற்று
சாதனைகளையும் இனி...?

ஆம் “கலைஞர்” என்ற சொல் இவ்வுலகில் என்றும்
மறையாத சொல்!



மருத்துவர்.ப.முருகதாஸ்
விருத்தாசலம்.

# விஜய் ஆட்சியை வீட்டுக்கு அனுப்பும் வரை தி.மு.க. தொண்டர்கள் ஓய மாட்டார்கள்!

## புதுக்கோட்டையில் மறியல் போராட்டத்தில் கைதான நிலையில் வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் பேட்டி!

புதுக்கோட்டை.ஆக.7–

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் உதயநிதி ஸ்டாலின் கைதை கண்டித்துபுதுக்கோட்டை பிருந்தா வனத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்ல பாண்டியன் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட திமுகவினர் கைதானார்கள் இந்த நிலையில் வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது


தஞ்சையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் திரிஷா பற்றி தொண்டர்கள் கூறிய தற்கான விளக்கத்தை மேடையிலே கூறிவிட்ட நிலையில் நாளை சட்டப்பேரவையில் காவிரி நீர் பிரச்சினை எழுப்பப்படும் என்ற அச்சத்தில் உதயநிதியுடன் விவாதம் செய்ய அச்சப்பட்டு, திட்டமிட்டு உதயநிதியை காலையிலே கைது செய்து அவரை நகர விடாமலே அங்கிருந்து போலீஸ் வேனிலே தஞ்சாவூருக்கு அழைத்து வந்துள்ளனர். திட்டமிட்டே பொய் வழக்கு போட்டு ஒரு வரலாற்றுப் பிழையை விஜய் செய்துள்ளார்.

திமுக தலைவர் தளபதி நினைத்திருந்தால் தமிழகத்தில் விஜய் ஆட்சியை வரவிடாமலே தடுத்திருக்கலாம். திமுக தலைவர் பெருந்தன்மையால் தமிழக வெற்றி கழகம் ஆட்சி கட்டிலில் அமர்ந்துள்ளத காவிரி பிரச் சினையை திசை திருப்பவே இந்த கைது நாடகம் நடத்தியுள்ளார் விஜய். பாஜக தலைவர் நைனார் நாகேந்திரன் திரிஷாவை பற்றி வெளிப்படையாக விமர்சித்த போது கைது செய்ய தயங்கிய விஜய் அரசு கண்டு கொள்ளவில்லை தைரியம் இருந்திருந்தால் அப்போதே நைனார் நாகேந்திரனை கைது செய்திருக்கலாம் ஏன் செய்யவில்லை?

பா.ஜ.க.வின் தத்துப் பிள்ளையாக விஜய் செயல்படுகிறார் வீட்டில் வாய்க்கரிசி போட்டுக் கொண்டுதான் திமுகவில் இணைந்துள்ளோம். ஒரு போதும் மிரட்டல் உருட்டலுக்கு திமுக தொண்டர்கள் அஞ்ச மாட்டார்கள்.

இவ்வாறு வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் கூறினார். பேட்டியின் போது முன்னாள் மாவட்ட கவுன்சிலர் டி.செல்வம் குலவாய்ப்பட்டி சி.சண்முகம் அரங்கநாயகம் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய , மாநகர திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருவது!




### முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 8-ஆம் ஆண்டு நினைவு நாள்!

# கடலூர் மேற்கு மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள்!

## மாவட்டக் கழக செயலாளர் சி.வி.கணேசன் எம்.எல்.ஏ. அறிக்கை!

கடலூர் ஆகஸ்ட் 6. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினர் சி.வி.கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை கீழ் வருமாறு:-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இன்று (07.08.2026 வெள்ளிக் கிழமை) அன்று கடலூர் மேற்கு மாவட்ட த்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை கழகங்கள் தோறும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தி, ஏழை, எளிய



மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் செய்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

அதுசமயம் மாவட்டக் கழக நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு, பொதுகுழு உறுப்பினர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக, கிளை வார்டு செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மாவட்ட அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் தொ.மு.ச நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் அனை வரும் தவறாமல் கலந்துக் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினர் சி.வி.கணேசன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### தருமபுரி மேற்கு மாவட்டம் முழுவதும்

# முத்தமிழறிஞர் கலைஞர் 8ம் ஆண்டு நினைவு நாள் - படத்திற்கு மரியாதை!

## மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர்.பெ.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி, ஆக. 7-

தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர் பெ.பழனியப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், கழக இளைஞரணி செயலாளர், இளைய கலைஞர், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின்படியும், இன்று (07.08.2026 வெள்ளிக் கிழமை) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு நாளையொட்டி அவரது புகழை போற்றும் வகையில் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர். பெ. பழனியப்பன் தலைமையில் காலை 9.00 மணியளவில் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதியில், பாப்பிரெட்டிப்பட்டி, வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

பாலக்கோடு சட்டமன்றத் தொகுதியில் காலை 9.00 மணியளவில் காரிமங்கலம், மாவட்ட கழக அலுவலகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

மேலும் மாவட்ட, ஒன்றிய, பேரூர், வார்டு, கிளை கழகங்கள் தோறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்க



ளின் திருவுருவப் படத்திற்கு கழக மூத்த முன்னோடிகளை வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்த வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

அதுசமயம் அந்தெந்த தொகுதிக்குட்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களில் தருமபுரி மேற்கு மாவட்டத்தைச் சார்ந்த மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், வார்டு, கிளை கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளையொட்டி

# திருப்பத்தூர் நகரில் இன்று அமைதிப் பேரணி!

## மாவட்டக் கழக செயலாளர் க.தேவராஜ் அறிக்கை!

திருப்பத்தூர், ஆக. 7–

திருப்பத்தூர் மாவட்டச் செயற்குமுக் கூட்டம் புதன்கிழமை வாணியம்பாடியிலுள்ள மாவட்டக் கழக அலுவகத்தில் மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் க.தேவராஜி கலந்துகொண்டு கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கியும், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதிஸ்டாலின் அவர்களை கைது செய்த நடிகர் விஜயின் த.வெ.க. அரசைக் கண்டித்து கண்



டனங்களை தெரிவித்தும் பேசினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு புகழஞ்சலியொட்டி (7–8–2026 வெள்ளிக் கிழமை) வார்டு, கிளைக்கழகங்கள் தோறும் அவரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த வேண்டுமென்றும்,

திருப்பத்தூர் தூயநெஞ்சக் கல்லூரி முதல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை வரை 7–8–2026 வெள்ளிக்கிழமை அன்று காலை 9.30 மணியளவில் அமைதிப் பேரணியாக சென்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளதால் அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழை ஓங்கிட செய்திடுவோம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டார்கள்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு

# கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம் முழுவதும் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி!

## மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

கள்ளக்குறிச்சி, ஆக.7:

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழகங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் அவர்கள் அறிக்கையின் மூலமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை பின்வருமாறு:

உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், இந்திய அரசியல் மூத்த தலைவராக இருந்த பல்வேறு சூழ்நிலைகளில் பல குடியரசு தலைவர்கள் மற்றும் பிரதமர்களை உருவாக்கி இந்திய அரசியலில் சமூக நீதியை காப்பதில் முதன்மையாக திகழ்ந்து, ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை பாதுகாத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் பேரியக்கத்தை கண்ட பேரறிஞர் அண்ணா வழியில் அயராது உழைத்து கழகத்தையும் கழக கொள்கைகளையும் கடைசி நொடி வரையில் பாதுகாத்து தமிழ் மொழிக்காக தமிழ் இனத்திற்காக உழைத்த நம் நெஞ்சத்தை விட்டு அகலாத தலைவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு தினமான இன்று 07.08.2026 வெள்ளிக்கிழமை, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழகங்கள் மற்றும்



வார்டு கழகங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்தும், கழக கொடியேற்றியும், புகழஞ்சலி செலுத்தி, ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சிகளை அந்தந்த பகுதியிலுள்ள மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய செயலாளர்கள், நகர செயலாளர், பேரூர் செயலாளர்கள், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளை மற்றும் வார்டு கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்திட வேண்டுமென கேட்டு கொள்கிறேன், இவ்வாறு தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. அவரது அறிக்கையின் மூலமாக கழக நிர்வாகிகள் மற்றும் உடன் பிறப்புகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### மும்பை புறநகர் மாநில தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞரின் எட்டாம் ஆண்டு நினைவேந்தல் கூட்டம்!

## தலைமை : ஜேம்ஸ் தேவதாசன்! சிறப்புரை: அலிசேக் மீரான்!

மும்பை, ஆக. 7–

தமிழரின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட முதுபெரும் தமிழறிஞரும் இனத்தின் அடையாளமாய், மொழியின் எழுச்சியாய் நிருவாகத்தின் அறிவூற்றாய் வாழ்ந்தவரும், மேனாள் முதல்வரும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு பாண்டுப் பிரைட் மேனிலைப்பள்ளியில் வைத்து புறநகர மாநிலத் தி.மு கழகப் பொறுப்புக்குழு உறுப்பினர் ஜேம்ஸ் தேவதாசன் தலைமையில் இன்று (07–08–2026 வெள்ளிக் கிழமை ) மாலை 6 மணியளவில் நடைபெறவுள்ளது.

மாநிலத் திராவிட முன்னேற்றக் கழகப் பொறுப்பாளர் அலிசேக் மீரான் நினைவேந்தல் நிகழ்வுச் சிறப்புரை ஆற்றவுள்ளார். பொறுப்புக் குழு உறுப்பினர்கள் பி.கிருஷ்ணன், வதிலை பிரதாபன், அ. இளங்கோ, ந.வசந்தகுமார், வே.சதானந்தன், ஜைனுல்லாபுதீன், வீரை சோ பாபு, மெஹபூப் பாஷா, சிவக்குமார் சுந்தர்ராஜ், சிலுவைதாசன் ஆகியோர் நினைவேந்தலுரை ஆற்றவுள்ளார்கள்.

புறநகர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அனைத்துக் கிளைக் கழகங்களின் நிருவாகிகளும் கழக உணர்வாளர்களும் நிகழ்வில் கலந்து கொண்டு கலைஞருக்குப் புகழஞ்சலி செலுத்தவுள்ளார்கள்.

எதிர்க்கட்சித் தலைவரும் மேனாள் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை 05–08–2026 புதன்கிழமை நடைபெறவிருந்த பட்ஜெட் கூட்டத் தொடரில் பங்கேற்க விடாமல் தடுக்கும் எண்ணத்திலும் பழிவாங்கும் நோக்கத்திலும் கைது செய்தமைக்காக மும்பை புறநகர் மாநிலத் திராவிட முன்னேற்றக் கழகம் வன்மையாகத் தமது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆலப்பாக்கம் கு.சண்முகம்
### ஆகஸ்ட் 7 (2023)



1975ஆம் ஆண்டு ஆலப்பாக்கம் கிளைக் கழக பிரதிநிதியாகவும் பின்னர், கிளைச் செயலாளர், மூன்று முறை வில்லிவாக்கம் ஒன்றியச் செயலாளர், மதுரவாயல் நகரச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல்வேறு கழகப் பொறுப்புகள் வகித்து தனது பகுதியில் கழகம் வளர்த்தவர்.

2006ல் மதுரவாயல் நகர்மன்றத் தலைவராகவும், 2022ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

சென்னை மாநகராட்சி சுகாதார நிலைக்குழு உறுப்பினராகவும், சென்னை துறைமுக பொறுப்புக் கழக உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.

2023ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளன்று நடைபெற்ற அமைதி பேரணியில் கலந்து கொண்ட வழியிலேயே திடீரென்று ஏற்பட்ட மாரடைப்பில் மறைவெய்தியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.